**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093805

1. District மாவட்டம்: கரூர் PS காவல்நிலையம்: கரூர் ஊ.த.த. பிரிவு Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 05/19 Date நாள்: 04.10.19

2. (i) Act சட்டம்: CRPC Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: THE PC ACT 1988 AS AMENDED Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BY THE PC [AMENDMENT] ACT 2018 Sections பிரிவுகள்: 7 AND 12
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல்: 03.10.19 Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல்: 18.00 Hrs Time to நேரம் வரை: 23.00 Hrs
(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 04.10.19 Time நேரம்: 13.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: VOL:1 Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 9 Km தென்கிழக்கு
Beat Number முறைக் காவல் எண் : (b) Address முகவரி : வட்டார போக்குவரத்து அலுவலகம், கரூர்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : ந. கனகமாணிக்கம் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : மா. நடராஜன்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 30.07.1972 (d) Nationality நாட்டினம் : இந்தியன் (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue வழங்கப்பட்ட நாள் : Place of Issue வழங்கப்பட்ட இடம் :
(f) Occupation தொழில் : இணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address முகவரி : ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. க. சுப்பிரமணியன், வட்டார போக்குவரத்து அலுவலர், கரூர்.
2. ந. தனசேகரன், மோட்டார் வாகன ஆய்வாளர், கரூர்.
மற்றும் 6 நபர்களுக்கு தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed திருமதி. ரூபா Rank ஆய்வாளர் to take up the investigation / Refused Investigation / transferred to PS [illegible] ; ..................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04-10-2019

A. [signature] 04/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04-10-2019 at 1400 hrs

Name: பெயர் A. ANNAMALAI
Rank: நிலை D.S.P. No. எண் ..........
V & AC, Karur.

**கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2019, பிரிவு 102 Cr.P.C மற்றும் பிரிவு 7, 12 of PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018.**

| | |
|---|---|
| **Accused :**<br>1. Tr. K.Subramanian,<br>Regional Transport Officer,<br>Karur, Karur District.<br><br>2. Tr. N.Dhanasekaran,<br>Motor Vehicle Inspector, Grade-I,<br>Karur, Karur District.<br><br>3. Tr. P.Kathirvel,<br>S/o. Palanisamy,<br>No.32, Bharathi Nagar,<br>Thanthondri Malai, Karur.<br>(Temporary Contract Worker under BONTON Software PVT LTD)<br><br>4. Tr. M.Sivaraj,<br>S/o.Maruthaiyappan,<br>No.58/10, Natthammedu,<br>Kodummudi, Erode District.<br>(Temporary Contract Worker under L3 IMPO solution PVT LTD)<br><br>5. Tr. Raguvaran, 21/2019,<br>S/o. Sivalingam,<br>A-1 Bus Stop, Near Selvam Mahal,<br>Vengamedu, Karur<br><br>6. Tr. Saravanan, 28/2019,<br>S/o. Varadharaj,<br>Thiruppathi Lay wood,<br>Chinnandankovil,<br>3rd Cross, Near Income<br>Tax Officer, Karur.<br><br>7. Tr. Mahendran,<br>S/o.Manickam,<br>West Street, No.164,<br>Thirumanilayur, Karur.<br><br>8. Tr. Subramanian,<br>S/o. Palaniyappan,<br>No.6/293, Saraswathi Nagar,<br>Aandankovil Post, Karur. | **பணிந்தனுப்பப்படுகிறது :-**<br>கரூர் மாவட்டம், கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம், பழகுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தல், வாகன பதிவு F.C ஆகியவற்றிற்காக அரசு ஊழியர்கள் லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 03.10.2019-ம் தேதி 18.00 மணி முதல் 23.00 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு. ந.கனகமாணிக்கம் அவர்களுடன் நடத்திய திடீர் இணை ஆய்வின் அடிப்படையில் துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு. ந.கனகமாணிக்கம் அவர்கள் கொடுத்த புகார் மனுவை இன்று 04.10.2019-ம் தேதி 13.00 மணிக்கு பெற்று கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2019, பிரிவு 102 Cr.P.C மற்றும் பிரிவு 7, 12 of PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018 –ன் படி மார்ஜினில் கண்டுள்ள எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். |

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: திரு. ந.கனகமாணிக்கம், த.பெ.மா.நடராஜன், துணை ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி. பெறுநர்: காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, பொருள்:- திடீர் இணை ஆய்வு – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது – தொடர்பாக. கரூர் மாவட்டம், கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம், பழகுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தல், வாகன பதிவு, F.C ஆகியவற்றிக்காக அரசு ஊழியர்கள் லஞ்சம் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 03.10.2019ம் தேதி சுமார் 18.00 மணிக்கு கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் எனது தலைமையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் பார்ட்டியினர் உதவியுடன் திடீர் இணை தணிக்கை செய்வதற்காக கரூர் பெருந்திட்ட வளாகம், எண்.126, தாந்தோன்றிமலை ரோட்டின் மேற்குபுறம் உள்ள கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நுழைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வின்போது மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையில் இருந்த ஒப்பந்த ஊழியர் திரு. சிவராஜ் என்பவரின் அருகில் இருந்த குப்பை கூடையில் ரூ. 10,240/- காணப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளரின் அறைக்கு மேற்கு பக்கம் உள்ள BONTON அலுவலக அறையில் திரு. கதிர்வேல் ஒப்பந்த ஊழியரின் மேஜையின் அடியில் ரூ.9,570/- இருந்தது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வெளியே தெற்கு பக்கம், அலுவலகத்திற்கும், சுற்றுச்சுவருக்கும் இடையே ரூபாய் 8,330/- இருந்தது. தபால் பிரிவிற்கு முன்பு கிழக்கு பக்க சுவற்றில் தொங்கவிடப்பட்டுள்ள பல்வேறு பணிகளுக்கான கால வரையரை பற்றிய விபரம் என்று குறிப்பிடப்பட்டிருந்த பிளக்ஸ் போர்டில் அதன் பின்புறம் ரூ.45,350/- சொருகி மறைத்து வைக்கப்பட்டிருந்தது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் BONTON அலுவலக அறைக்கு மேற்கு பக்கம் வெளியே திறந்த வெளியில் ரூ. 5,400/- இருந்தது. மேற்படி பணம் ரூபாய் 78,890/- தொடர்பாக யாரும் உரிமை கோரததாலும், மேற்படி பணம் தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் பணியாளர்களிடம் விளக்கம் கேட்க ஒருவரும் அது தொடர்பாக எதுவும் கூறாததாலும், மேற்படி பணம் ஓட்டுநர் உரிமம் மற்றும் பணிகளுக்காக லஞ்சம் பெற்ற பணம் என்று சந்தேகப்படும்படியாக இருந்ததாலும் 03.10.2019ம் தேதி 1800 மணி முதல் 2300 மணி வரை தயார் செய்யப்பட்ட திடீர் இணை ஆய்வு அறிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வராண்டாவில் இருந்த 1) திரு. ரகுவரன், த.பெ.சிவலிங்கம், வெங்கமேடு, செல்வம் மஹால் அருகில் கரூர் என்பவர் விநாயகா ஆட்டோ கன்செல்டிங் அலுவலகத்தில் வேலை செய்வதாகவும், 2) திரு. சரவணன், த.பெ.வரதராஜ், சின்னாண்டான்கோவில், 3வது தெரு, கரூர் என்பவர் கார் வாங்கி விற்கும் தொழில் செய்வதாகவும், 3) திரு. மகேந்திரன் த.பெ.மாணிக்கம், திருமாநிலையூர், கரூர் என்பவர் கார் வாங்கி விற்கும் தொழில் செய்வதாகவும்,

4) திரு. சுப்பிரமணியன், த.பெ.பழனியப்பன், எண். 6/293, சரஸ்வதி நகர், ஆண்டான்கோவில் அஞ்சல், கரூர்-2 என்பவர் வி.கே.ஏ நிறுவனத்தின் வாகனங்களை தணிக்கைக்கு கொண்டு வந்ததாகவும், அவர்கள் வைத்திருந்த பணம் முறையே ரூ.20,000/-, ரூ.10,500/-, ரூ.9,200/-, ரூ.13,000/- ஆகியவற்றிக்கு சரியான முகாந்திரம் கூறாததால், மேற்படி பணம் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோருக்கு லஞ்சம் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று சந்தேகப்படும்படியாக இருந்ததால் அவர்களிடமிருந்து மொத்தம் ரூபாய் 52,700/- கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூபாய் 1,31,590/- தனிநபர்கள் மற்றும் கேட்பாரற்று கிடந்த மற்றும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தொடர்பாக திரு. க.சுப்ரமணியன், வட்டார போக்குவரத்து அலுவலர், திரு. ந.தனசேகரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை I, மேலே சொன்ன நான்கு தனிநபர்கள், ஒப்பந்த பணியாளர்கள் திரு. கதிர்வேல், மற்றும் திரு. சிவராஜ் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் மேற்படி அலுவலகத்தில் நிரந்தர பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் தினசரி ரொக்க கையிருப்பு சிறப்பு பதிவேடு, கைப்பற்றப்பட்ட பணம், திடீர் இணை ஆய்வு அறிக்கை ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- ந.கனகமாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சி, நாள்: 04.10.2019. Sir, Received the complaint on 04.10.2019 at 13.00 hrs, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.05/2019, u/s 102 Cr.P.C and 7, 12 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 today (04.10.2019) at 13.00 hrs Sd/- A.Annamalai, Deputy Supdt. of Police, V&AC, Karur. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு. ந.கனகமாணிக்கம் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து தயார் செய்த திடீர் இணை ஆய்வு அறிக்கை ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக ஆய்வாளர் திருமதி J.ரூபாகீதாராணி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

A. [signature] 4/10/19

(ஆ.அண்ணாமலை)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கரூர்
04.10.2019.